
# பன்முகப் பார்வையில் திருக்குறள்

தொகுதி - I

205 மணி நேரம் இணையவழியில் நடைபெற்ற உலகச் சாதனை திருக்குறள்
ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு



முனைவர் தாமரை

# பன்முகப் பார்வையில் திருக்குறள்

## தொகுதி 1

பதிப்பாசிரியர்

"திருக்குறள் ஔவை"

முனைவர் **தாமரை**

இலக்கியா பதிப்பகம்,

தமிழூர்

ISBN. No. : 978-93-92649-27-1

நூல் தலைப்பு :

✱ பன்முகப் பார்வையில் திருக்குறள்

தொகுதி 1

பதிப்பாசிரியர் :

✱ திருக்குறள் ஔவை முனைவர் தாமரை

பதிப்பு:

✱ முதற்பதிப்பு, ஜூன், 2022.

உரிமை:

✱ ஆசிரியருக்கு...

பக்கங்கள் :

✱507

விலை :

✱ ரூ.500/-

அச்சிட்டோர்...

**இலக்கியா பதிப்பகம்**

தமிழூர் - 627 808,

அடைக்கலப்பட்டணம் அஞ்சல்,

தென்காசி மாவட்டம். கைபேசி : 99407 70433.

மின்னஞ்சல் : elakkiyapathipagam@gmail.com

29. திருக்குறளில் மேலாண்மை

முனைவர் மு. செந்தில்குமார் - 257

30. திருவள்ளுவரின் சமூகச் சீர்திருத்த சிந்தனைகள்

நா. செர்லிபிரிசில்லா - 263

31. திருக்குறளும் பொது நிர்வாகமும்

கு. செல்வன் - 270

32. திருக்குறளும் பொருள் ஈட்டலும்

கு. செல்வன் - 278

33. குறட்பாக்களின் வழி வாழ்வியல் நெறி(பொதுவியல்)

இரா. செல்வஸ்ரீ - 286

34. குறளின் குரல்

முனைவர் சி. சொர்ணமாலா - 294

35. திருக்குறளில் அமைப்புமுறை காட்டும் ஒழுங்கு

முனைவர் த. தனலெட்சுமி - 302

36. வள்ளுவர் உணர்த்தும் புல்லறிவாண்மை

மா. தனலெட்சுமி - 309

37. கீழ்க்கணக்கில் வள்ளுவர் இடம்பிடித்த வரலாறு

ரா. தீபிகா - 314

# குறளின் குரல்

முனைவர் சி. சொர்ணமாலா
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய சமூகம், தமிழ்ச் சமூகம். தனக்கென தனித்த பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் கட்டுக்கோப்பாய் வைத்திருப்பது மட்டுமன்றி, அதற்கான இலக்கண, இலக்கியங்களை வகுத்த சமூகம். அவற்றுள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அறநெறிச் சாரங்களின் தொகுப்பு எனலாம். அவற்றுள்ளும் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் வழி, இனம், மொழி, மதம், நாடு கடந்து, தமிழர் தம் மாண்பினையும் தமிழின் பெருமையினையும் 'குன்றிலிட்ட விளக்காய்' மிளிரச் செய்வது வள்ளுவர் தந்த திருக்குறள்.

யாவர்க்கும் பொருந்தி நிற்கின்ற அறநெறிகள், பொருளியல் செய்திகள், அரசியல் ஆலோசனைகள், சமூகம் சார் சிந்தனைகள், மருத்துவ அறிவுறுத்தல்கள், இலக்கிய வளமைக் கருத்துக்கள் போன்ற பொருள்சார் பன்முகக் குறட்பாக்களால் தமது குரலைப் பதிவு செய்தவர் வள்ளுவர். அவ்வகையில் மருத்துவ அறிவுறுத்தல்களை அன்றே அள்ளித் தெளித்த வள்ளுவனின், 'வருமுன் காப்போம் வந்தபின்னும் பாதுகாப்பாய் வாழ்வோம்' என்னும் பொருளமைவு கொண்ட 'குறளின் குரலை' ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.